www.tamilarangam.net

# இலங்கை சுனாமிப் பேரழிவு:

## நிகழ்வுகளும் செயற்பாடுகளும்

அறிக்கை 5

15 நவம்பர் 2005

*வெளியீடு:*

சுனாமி தகவல் திட்டம்

தமிழ் தகவல் நடுவம்

Thulasi
Bridge End Close
Kingston upon Thames KT2 6PZ
United Kingdom
**Telephone: +44 (0)20 8546 1560**
**Fax: +44 (0)20 8546 5701**
**E-mail: info.tic@sangu.org**

# இலங்கை சுனாமிப் பேரழிவு: நிகழ்வுகளும் செயற்பாடுகளும்

## அறிக்கையின் நோக்கம்

*2004ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ம் திகதி சுனாமிப் பேரலையினால் ஏற்பட்ட அழிவுக்குப் பின்னர் புனர்வாழ்வு, புனரமைப்பு தொடர்பான நிகழ்வுகள் பற்றிய தகவல்களை, சமூக வளர்ச்சி நடுவம் (Centre for Community Development, UK), தமிழ் தகவல் நடுவம் (Tamil Information Centre, UK), மனித உரிமைகளுக்கும் வளர்ச்சிக்குமான நடுவம் (Centre for Human Rights and Development, Sri Lanka) ஆகியவற்றின் சக நிறுவனங்களுக்கும், மற்றைய புனர்வாழ்வு, வளர்ச்சி நிறுவனங்களுக்கும், அரசுகளுக்கும் தருவதே இவ்வறிக்கையின் நோக்கமாகும்.*

## முகவுரை

சுனாமிப் பேரலையின் அழிவு நடந்து ஒரு வருடமாகி விட்டது. இலங்கையின் கரையோரத்தில் மூன்றில் இரண்டு பகுதியைத் தாக்கிய இப்பேரலையின் பெரும்பாலான பாதிப்புக்கள் வடகிழக்குக் கரையோரத்திலேயே ஏற்பட்டன. இதில், அடிப்படை வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபட்ட மீனவர்கள், சிறு வர்த்தகர்கள், விவசாயிகள், சுற்றுலாத்துறை ஊழியர்கள் போன்றோரே முக்கியமாகப் பாதிக்கப்பட்டனர். குறிப்பாக, வறுமைக்கோட்டிற்கு கீழே வாழும் அநேக மக்கள் பாதிக்கப்பட்டு, வடகிழக்கின் வறுமை நிலை மேலும் மோசமடைந்துள்ளது. பொருளாதார அபிவிருத்திக்கான இலங்கை தேசிய மன்றத்தின் மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளுக்கான அறிக்கையும் இதனையே சுட்டிக்காட்டுவதுடன், சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் காணப்படும் தேசிய வருட உற்பத்தியில் ஒரு தலை வருமானமான (per capita income) 640 அமெரிக்க டொலர்கள், தேசிய மட்டத்தை விட மூன்றில் இரண்டு பங்கு குறைவானதாகும் எனக் குறிப்பிட்டுள்ளது. வடகிழக்குக் கரையோர மக்கள் தொகையில், அம்பாறையில் 78 வீதமும், முல்லைத்தீவில் 80 வீதமும், கிளிநொச்சியில் 35 வீதமும் சுனாமியால் பாதிக்கப்பட்டன. தென் மாவட்டங்களான காலி மாத்தறை போன்ற இடங்களில் 20 வீதத்திற்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டனர்.

சுனாமிக்குப் பின், அரசாங்கம் புனரமைப்புக்கான பல செயற்திட்டங்களை வகுத்தும், தகுந்த முகாமைத்துவம் இன்மையால் இவைகள் சீராக அமுல்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. இது தவிர, இலங்கை அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே இணைக்கட்டமைப்பொன்றை உருவாக்குவதில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக, அந்தத் திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை. மேலும், வெளிநாட்டு உதவிகள் பற்றிய தகுந்த தகவல்கள் இல்லாமை, உதவித்திட்டங்களில் காணப்படும் ஒழுங்கீனங்கள் என்பன பற்றி இலங்கையின் கணக்காளர் நாயகமும் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார். இதுபோன்ற ஊழல்கள், குறைபாடுகள் பற்றி விசாரிக்க எந்த வசதிகளும் இல்லையென்பதைச் சுட்டிக்காட்டி, உடன் நடவடிக்கை எடுக்கும்படி ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்கத்தைக் கோரியுள்ளது. மேலும், Transparency International என்ற அமைப்பு, பாதிக்கப்படாதவர்கள், அரசியல் செல்வாக்குள்ளவர்கள் முதலியோர் சட்டத்திற்குட்படாத வகையில் நிவாரணம் பெற்ற சந்தர்ப்பங்களைக் குறிப்பிட்டு, அவை தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படி பரிந்துரைத்துள்ளது.

அனைத்துலக செஞ்சிலுவை செம்பிறை சம்மேளனத்தின் (International Federation of Red Cross and Red Crescent Societies - IFRC) 2005ம் ஆண்டுக்கான உலக அனர்த்த அறிக்கையில், சர்வதேச நிவாரண நிறுவனங்கள் போதிய தகவல்களோ, தேவைகள் பற்றிய ஆய்வுகளோ இல்லாமல், ஆரம்பக்கட்ட நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டமை பற்றி விமர்சிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்தாலோசிக்கப்படாமை, நிவாரண நிறுவனங்களுக்கிடையே தொடர்பு பேணாமை, ஒரே திட்டத்தை ஒன்றுக்கு மேற்பட்ட அமைப்புக்கள் செயற்படுத்துதல், முக்கிய தேவைகள் நிறைவேற்றப்படாமை போன்ற குறைபாடுகளுடன், பால்நிலை பற்றிக் கருத்தில் கொள்ளாமை ஒரு முக்கிய குறைபாடாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. போதிய உளவள மருத்துவர்கள் இல்லாமை, உதவி வழங்கும் நிறுவனங்களின் நடவடிக்கைகளைப் பெருமளவு மட்டுப்படுத்தும் எனவும் இவ்வறிக்கை தெரிவிக்கிறது. பிரித்தானிய செஞ்சிலுவைச் சங்கம் தனது அறிக்கையொன்றில், இலங்கையில் தொழிலாற்றி வரும் 500க்கு மேற்பட்ட உதவி வழங்கும் நிறுவனங்களில் பெரும்பாலானவை அனர்த்த நிவாரண நடவடிக்கைகளில் எந்த வித அனுபவமும்

இல்லாதவை எனச் சுட்டிக்காட்டுகிறது. நிறுவனங்களுக்கிடையே தொடர்பின்மையாலும், போட்டி மனப்பான்மையினாலும், நிவாரண நடவடிக்கைகள் தாமதப்பட்டுள்ளதாக இவ்வறிக்கை கூறுகிறது.

இதற்கிடையே, 2005 நவம்பர் மாத ஜனாதிபதி தேர்தல், சுனாமி புனருத்தான, சமாதான நடவடிக்கைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. வடகிழக்கில் தொடரும் மனித உரிமை மீறல்களும், கொலைகளும் சமூகத்தைச் சிதைக்கும் சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளதுடன், சர்வதேச மட்டத்தில் கண்டனங்களையும் எதிரான விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளன. இதனால், நீதிக்கும் சுயநிர்ணய உரிமைக்குமான போராட்டம் மோசமாகப் பாதிக்கப்படும் நிலை தோன்றியுள்ளது.

## புள்ளி விபரங்கள்

சுனாமியினால் மரணங்கள், சேதங்கள், இடப்பெயர்வு ஆகியன தொடர்பான புள்ளி விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| பாதிப்பு | தொகை |
|---|---|
| மரணங்கள் | 31,229 |
| காயங்கள் | 23,189 |
| காணாமற் போனவர் | 4,093 |
| இடப்பெயர்வு (நபர்கள்) | 499,783 |
| இடப்பெயர்வு (குடும்பங்கள்) | 141,022 |
| பாதிக்கப்பட்ட குடும்பங்கள் | 266,499 |
| தாயையும் தந்தையையும் இழந்த சிறுவர் | 1,071 |
| தாயை அல்லது தந்தையை இழந்த சிறுவர் | 3,739 |
| பகுதியாகப் பாதிக்கப்பட்ட வீடுகள் | 43,361 |
| முழுமையாக அழிக்கப்பட்ட வீடுகள் | 63,447 |
| பாதிக்கப்பட்ட உணவு விடுதிகள் | 144 |
| பாதிக்கப்பட்ட விருந்தினர் விடுதிகள் | 248 |
| பாதிக்கப்பட்ட சிறு வணிக நிலையங்கள் | 210 |
| அழிக்கப்பட்ட படகுகளும் கலங்களும் | 15,300 |
| அழிக்கப்பட்ட கோயில்கள் | 98 |
| அழிக்கப்பட்ட மற்றைய மத நிலையங்கள் | 298 |
| முழுமையாக அழிக்கப்பட்ட பாடசாலைகள் | 73 |
| பகுதியாகப் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் | 109 |
| முழுமையாக அழிக்கப்பட்ட மருத்துவ, பிரசவ நிலையங்கள் | 09 |
| பகுதியாகப் பாதிக்கப்பட்ட மருத்துவ நிலையங்கள் | 18 |
| அழிக்கப்பட்ட மருந்து, ஆரோக்கிய நிலையங்கள் | 29 |
| பகுதியாகப் பாதிக்கப்பட்ட மருந்து, ஆரோக்கிய நிலையங்கள் | 41 |

*மூலம்: 26 டிசம்பர் 2004-30 மார்ச் காலவெளிக்கான அறிக்கை, கணக்காளர் நாயகம், இலங்கை*

## இணைக் கட்டமைப்பு

சுனாமி இணைக் கட்டமைப்பு தொடர்பாக ஆரம்பத்தில் ஏற்பட்ட இணக்கப்பாடு இன்றும் கனவாகவே உள்ளது. நீண்ட சர்ச்சைக்கும் கலந்துரையாடலுக்கும் பின்னர், விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் சுனாமி புனரமைப்புக்கான இணைக்கட்டமைப்பை உருவாக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் 2005ம் ஆண்டு ஜுன் மாதம் 24ம் திகதி கைச்சாத்திட்டனர். பின்வரும் குழுக்களை உருவாக்குவதற்கான சரத்துக்களை இவ்வொப்பந்தம் கொண்டிருந்தது:

- **உயர்மட்டக்குழு அல்லது சுனாமி-பின் கரையோர புனரமைப்புக் குழு** - இது அரசாங்கம், விடுதலைப் புலிகள், முஸ்லிம் கட்சிகள் இவை மூன்றிலிருந்தும் தலா ஒரு பிரதிநிதியைக் கொண்ட கொழும்பில் இயங்கும் உயர் மட்டக் குழுவாகும். இந்தக் குழுவே அனைத்து உள்நாட்டு வெளிநாட்டு உதவிகளையும் நீதியான முறையில் பகிர்ந்தளிப்பதற்கான கொள்கையை நிர்ணயிக்கும்.

- **பிராந்தியக் குழு** - பிராந்திய மட்டத்திலான இக்குழு, இரண்டு அரசாங்கப் பிரதிநிதிகளையும், விடுதலைப் புலிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐவரையும், மூன்று முஸ்லிம் பிரதிநிதிகளையும் கொண்டதாக இருக்கும். கிளிநொச்சியில் இயங்கும் இக்குழு, நிவாரணம், புனரமைப்பு, அபிவிருத்தி தொடர்பான திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கல், திட்டங்களை அமுல் நடத்துதல், மேற்பார்வை செய்தல் போன்றவற்றை உயர்மட்டக்குழுவின் ஆலோசனையுடன் செயல்படுத்தும்.

- **மாவட்டக்குழுக்கள்** - இவை சுனாமியால் பாதிக்கப்பட்ட வடகிழக்கைச் சேர்ந்த ஆறு மாவட்டங்களிலும் செயற்படும்.

மேற்கூறிய புனரமைப்பு அபிவிருத்திக்கான நிதி வளங்கள் ஒரு சர்வதேச நிதி நிறுவனத்தின் பொறுப்பிலிருக்கும்.

## இணைக் கட்டமைப்புக்கு எதிர்ப்பு

எனினும், இலங்கையில் இவ்வொப்பந்தத்திற்கு எதிரான நடவடிக்கைகள், குறிப்பாக மக்கள் விடுதலை முன்னணி (JVP), பௌத்த குருமார்கள் அடங்கிய தேசிய சிங்கள மரபுரிமை (JHU) போன்ற கட்சிகளால் முன்னெடுக்கப்பட்டன. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி (UPFA) அரசு விடுதலைப்புலிகளுடன் செய்த உடன்படிக்கையை எதிர்த்து அரசின் பங்காளிக் கட்சியான JVP அரசிலிருந்து விலகியது மட்டுமல்லாமல், இவ்வொப்பந்தம் இலங்கை அரசியல் சாசனத்தை மீறுகிறது எனக்கூறி அதற்கெதிரான தற்காலிகத் தடையுத்தரவை உயர் நீதிமன்றத்தில் கோரியது. வன்முறை, மனித உரிமை மீறல்கள் போன்றவற்றில் ஈடுபட்டுவரும் விடுதலைப்புலிகள் எனும் சட்டத்தால் அங்கீகரிக்கப்படாத ஒரு அமைப்புடன் அரசாங்கம் ஒப்பந்தம் செய்தது சட்டத்திற்கு முரணாகும் என்பதே JVPயின் வாதமாகும். உயர்நீதிமன்றமும் ஒரு தற்காலிகத் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது.

உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில், ஜனாதிபதியின் பரந்த அதிகாரங்களின் அடிப்படையில் இத்தகைய ஒப்பந்தம் ஒன்றைச் செய்வது அவரது அதிகாரத்திற்கு உட்பட்டதென்று கூறியுள்ளது. ஆயினும், நிதிமுகாமைத்துவம், திட்டமிடல், நிவாரணம் வழங்கல், புனரமைப்பு, அபிவிருத்தி போன்றவை தெளிவாக வரையறுக்கப்பட்ட அரச அதிகாரங்கள் எனவும், இவை கிளிநொச்சியை தலைமையகமாகக் கொண்டிருக்கும் பிராந்தியக் குழுக்களுக்கு வழங்கப்பட்டமை அரசியல் சாசனத்திற்கு முரணானது எனவும் தீர்ப்பளித்துள்ளது.

## சமாதான முயற்சிகள்

இதே வேளையில், சமாதான முயற்சிகளும் முட்டுக்கட்டை நிலையை அடைந்துள்ளன. 2005 ஆகஸ்ட் 12ம் திகதி நடந்த வெளிநாட்டு அமைச்சர் கதிர்காமரின் கொலையின் பின்னணியில், போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்வது தொடர்பாக விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்குமிடையே ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்யுமாறு முன்னைய ஜனாதிபதி புதிய நோர்வே பிரதமரிடம் வேணடுகோள் விடுத்தார். நோர்வே வெளிநாட்டு அமைச்சருடன் இது தொடர்பாக இணக்கப்பாடு ஏற்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் தெரிவித்ததாகச் செய்திகள் வெளியான போதும் எந்தவிதச் சந்திப்பும் நடைபெறவில்லை.

தொடர்ந்து நடைபெற்று வரும் தாக்குதல்கள், கொலைகள் பற்றி அதிருப்தியடைந்த நோர்வே அரசாங்கம் சமாதான முயற்சிகளின் கூட்டுத்தலைமைத்துவம் வகிக்கும் ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் கூட்டமொன்றை 2005ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ம் திகதி நியுயோர்க் நகரில் ஒழுங்கு செய்தது. இந்தக் கூட்டத்தில், விடுதலைப்புலிகள் சமாதான ஒப்பந்தத்தில் தமது ஈடுபாட்டை வெளிப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமெனவும், புதிய அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அவர்கள் மாற வேண்டுமெனவும் கோரப்பட்டது. மேலும், அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஒஸ்லோ ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையிலான தீர்வினை நோக்கி செயற்படவேண்மெனவும் கோரப்பட்டுள்ளது.

## மனித உரிமைகள்

சமாதான நடைமுறையின் உறுதித் தளமாக விளங்கும் போர் நிறுத்த ஒப்பந்தம், தொடரும் வன்முறையின் காரணமாக ஆபத்தை எதிர்நோக்குகின்றது என நியூ யோர்க் நகரில் கூடிய சமாதான முயற்சிகளின் கூட்டுத்தலைமைத்துவம் பிரகடனம் செய்தது.

பரவலான மனித உரிமை மீறல்கள், முக்கியமாக விடுதலைப் புலிகளுக்கும் கருணா அணிக்கும் கிழக்கில் நடைபெறும் சண்டையின் மூலம் எழும் மீறல்கள், பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளன. எல்லாப் பக்கங்களிலும் பலர் கொல்லப் பட்டுள்ளனர். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), விடுதலைப் புலிகளைக் குற்றம் சாட்டியதுடன், கொலைகளின் பட்டியலொன்றை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் (Sri Lanka Monitoring Mission - SLMM), மனித உரிமைகள் ஆலோசகரான இயன் மாட்டினுக்கும் (Ian Martin), அனைத்துலகச் சமூகத்துக்கும் சமர்ப்பித்துள்ளது. அனைத்துலகச் சமூகத்தின் கவலைகளுக்குப் பதிலளித்த விடுதலைப் புலிகள், இலங்கை அரசாங்கம் மற்றைய தமிழ்க் குழுக்களுடன் இணைந்து, தங்களுடன் ஒரு நிழற் போரை நடத்துவதாகக் குற்றம் சுமத்தியுள்ளனர். தங்களுடைய உயர் அங்கத்தவர்கள் பலர் தாக்குதலுக்கு ஆளாகியிருப்பதாகவும் சிலர் கொல்லப்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளனர்.

நாள்தோறும் கொலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. கோப்பாய் கிறிஸ்டியன் கல்லூரியின் அதிபர் நடராஜா சிவகடாட்சம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபர் கணபதி ராஜதுரை ஆகியோர் 2005 அக்டோபர் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் கொலை செய்யப்பட்டனர். இக்கொலைகள், தமிழ்ச் சமூகத்தைப் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளன. இச்சம்பவங்களைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் மாணவர்களும் மற்றையோரும் ஆர்ப்பாட்டங்களை நடாத்தினர்.

இக்கொலைகளுக்கு மேலாக, முக்கியமாக கிழக்குப் பகுதிகளில், இராணுவ, விடுதலைப் புலிகளது முகாம்கள், கடைகள், அலுவகங்கள் ஆகியவை மீதான தாக்குதல்கள் தொடர்கின்றன. கொலைகள் போர் நிறுத்தத்தை வலிதற்றதாக்கி, இரு தரப்புக்குமிடையே அவநம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு கூறியுள்ளது. 01.02.2002 முதல் 30.09.2005 வரையிலான காலப்பகுதியில், விடுதலைப் புலிகள் 3,188 யுத்த நிறுத்த மீறல்களையும், இலங்கை பாதுகாப்புப் படைகள் 144 மீறல்களையும் புரிந்துள்ளன என்று கண்காணிப்புக் குழு தெரிவிக்கின்றது. கொலைகள், படைகளுக்குச் சிறுவர் சேர்ப்பு, சித்திரவதை, வலுக்கட்டாயப் பணச்சேகரிப்பு ஆகிய மீறல்கள் இவற்றுள் அடங்குகின்றன.

வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் 12.08.2005ல் கொலை செய்யப்பட்ட பின்னர், ஜனாதிபதி அவசரகாலச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தார். அதன்பின் ஒவ்வொரு மாதமும் அவசரகாலச் சட்டத்தை பாராளுமன்றம் நீடித்துக் கொண்டு வருகிறது. இக்கொலையைத் தொடர்ந்து, ஐரோப்பிய யூனியன் விடுதலைப் புலிகளைக் கண்டனம் செய்ததுடன், அரசியல் நோக்கங்களை வன்செயல் மூலம் அடைய எத்தனிப்பது ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் தெரிவித்துள்ளது. விடுதலைப் புலிகளின் தூதுக்குழுக்கள் அங்கத்துவ நாடுகளுக்குச் செல்வதற்குத் தடை விதித்ததுடன், பயங்கரவாதப் பட்டியலில் விடுதலைப் புலிகளைச் சேர்க்க நேரலாம் எனவும் எச்சரிக்கை செய்துள்ளது.

வெளிநாட்டமைச்சரின் கொலையில் தமக்குத் தொடர்பில்லையென விடுதலைப் புலிகள் கூறியுள்ளனர். தூதுக்குழுத் தடைக்கு எதிராக வெளிநாட்டுத் தமிழ்ச் சமூகத்தின் அங்கத்தவர்கள் ஆர்ப்பாட்டமொன்றை ஐரோப்பிய யூனியனின் பிரசல்ஸ் (Brussels) அலுவலகத்துக்கு முன்பாக 24.10.2005 அன்று நடத்தினர். விடுதலைப் புலிகளுக்கு எதிரான குழுக்கள் அதே அலுவலகத்தின் முன் 15.11.2005 அன்று ஆர்ப்பாட்டமொன்றை நடத்தி, விடுதலைப் புலிகளின் கொலைகள், சித்திரவதை ஆகியவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

சித்திரவதையில் தொடர்ந்து ஈடுபடுவதாக இலங்கை பொலிஸார் மீது குற்றம் சாட்டப்படுகிறது. குற்றவியல் விசாரணைகளின் ஒரு முறையாக சித்திரவதை உபயோகிக்கப்படுவதாகவும், திட்டமிட்ட முறையிலும் பரவலாகவும் இடம் பெறுவதாகவும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையாளர் ராதிகா குமாரசுவாமி கூறுகிறார். சித்திரவதை உட்பட மோசமான குற்றச் செயல்களில் ஈடுபட்டதற்காக 106 பொலிஸாரை வேலையிலிருந்து தற்காலிக நீக்கம் செய்ய பொலிஸ் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. அவர்களுக்கு எதிராகக் குற்றவியல் வழக்குகளை வழக்குரைஞர் நாயகம் தாக்கல் செய்துள்ளார். ஒரு விசேட பொலிஸ் குழுவின் விசாரணையின் பின்னர்தான் இந்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அப்படியிருந்தும், பொலிஸ்

ஆணைக்குழுவைத் தாக்கும் வகையில் இலங்கை பொலிஸ்மாஅதிபர் விமர்சனம் செய்துள்ளார். பொலிஸ்மாஅதிபரின் கூற்று, சட்ட நடவடிக்கைகளைத் தடை செய்யும் வகையில் அமைந்துள்ளது என ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றம் சாட்டியுள்ளது.

## இயன் மாட்டின் பேச்சுவார்த்தை

இது இவ்வாறிருக்க, சமாதான முயற்சிகளில் மனித உரிமைகள் சம்பந்தமான திட்டங்களை முன்னெடுப்பது பற்றி இயன் மாட்டின் 2005ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இலங்கை அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தினார். ஜப்பானிய நகரான ஹக்கோனில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் நடந்த கூட்ட முடிவுகளின் அடிப்படையில் மனித உரிமைகள் தொடர்பாகச் செயற்படத் தயாராக இருப்பதாக இலங்கை அரசாங்கம் கூறியுள்ளது. ஹக்கோன் முடிவுகள் வருமாறு:

- மனித உரிமைகள், மனிதாபிமானக் கொள்கைகள் தொடர்பான ஒரு பிரகடனத்தை வரைதல்.
- பொலிஸ், இராணுவ, சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமான மனித உரிமைகள் பயிற்சி நெறி ஒன்றை உருவாக்குதல்.
- மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் நடவடிக்கைகளை இலங்கை முழுவதும் விரிவுபடுத்தும் வகையில் அதனை வலுப்படுத்தல்.

மேற்கூறிய பிரகடனம் தொடர்பான தனது நகல் திட்டங்களை இலங்கை அரசாங்கம் ஏற்கனவே சமர்ப்பித்துள்ளது. விடுதலைப் புலிகள் தமது பதிலில் தற்போதுள்ள போர் நிறுத்த ஒப்பந்தம் முழுமையாக அமுல் நடத்தப்படுவதிலுள்ள முரண்பாடுகள் தீர்க்கப்படும் வரை மனித உரிமைகள் சம்பந்தமான நடவடிக்கைகள் பின்போடப்பட வேண்டும் எனக் கூறியுள்ளனர். அண்மையில் நடந்த இராணுவ புலனாய்வுப் பிரிவு தலைமை அதிகாரி லெப். கேணல் மீதீனின் கொலையின் பின், போர்நிறுத்த ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

## தருமப் பட்டியலிலிருந்து நீக்கம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், பிரித்தானிய தரும ஆணைக்குழுவினால் தரும நிறுவனங்களின் பட்டியலிலிருந்து 10.08.2005 அன்று நீக்கம் செய்யப்பட்டது, இலங்கை வடகிழக்குப் பிரதேசத்தில் மீள்கட்டமைப்பு நடவடிக்கைகளுக்கு மேலுமொரு சோதனையாக அமைந்துள்ளது. இலங்கை அரசு விதித்த இராணுவ, பொருளாதாரத் தடைகள் காரணமாக நலிந்த வடகிழக்கு மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 1992 மார்ச் மாதத்தில் ஒரு தரும நிறுவனமாக பிரித்தானியாவில் பதிவு செய்யப்பட்டது. பிரித்தானியாவில் சேகரிக்கப்படும் நிதி, இலங்கையில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது என்ற குற்றச்சாட்டு எழுந்தமையினால், புனர்வாழ்வுக் கழகத்தின் மீது பிரித்தானிய தரும ஆணைக்குழு அக்டோபர் 2000ல் ஒரு விசாரணையை ஆரம்பித்தது. நிவாரணம், புனர்வாழ்வு ஆகியவற்றில் மிகச் செம்மையாகச் செயலாற்றியமைக்காக அனைத்துலக நிறுவனங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைப் பாராட்டியுள்ளன. ஆயினும், பிரித்தானியாவிலிருந்து இலங்கைக்கு நிதி அனுப்பியமைக்கான தகுந்த ஆவணங்களை புனர்வாழ்வுக் கழகம் சமர்ப்பிக்க முடியாதிருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இலங்கை அரசு விதித்திருந்த கட்டுப்பாடுகளின் காரணமாக, நிதியை உத்தியோகபூர்வமற்ற வழிகளில் அனுப்பியதாக புனர்வாழ்வுக் கழகம் கூறுகிறது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இலங்கையில் ஒரு பதிவு செய்யப்பட்ட தரும நிறுவனமாக இயங்குகிறது. வடகிழக்குப் பிரதேசத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தற்காலிகக் குடியிருப்புகளை நிர்மாணிப்பதில் அளித்த பங்குக்காக, இலங்கை ஜனாதிபதியிடமிருந்து ஒரு பாராட்டுப் பரிசை செப்டம்பர் 2005ல் பெற்றது.

## வெளிநாட்டு உதவிகள்

இதுவரை வெளிநாட்டு அரசுகளும் சர்வதேச உதவி வழங்கும் அமைப்புகளும் 3,648 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (ரூபாய் 3,724 கோடி) தருவதாக உறுதியளித்துள்ளன. எனினும் 1,690

மில்லியன் அமெரிக்க டொலர்கள் (ரூபாய் 1,725 கோடி) மட்டுமே குறித்த திட்டங்களுக்கென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் 529 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனாகவும், 1,161 மில்லியன் உதவித் தொகையாகவும் வழங்கப்படும். கணக்காளர் நாயகத்தின் அறிக்கைப்படி ஒப்பந்த உதவியில் 13.5 வீதம் மட்டுமே ஜூலை 2005 வரை செலவழிக்கப்பட்டுள்ளது.

### உள்நாட்டு உதவிகள்

இருபது உள்நாட்டு நிறுவனங்கள் சேகரித்த 42.1 மில்லியன் டொலர்களில் 15.5 மில்லியன் (37 வீதம்) மட்டுமே 17 ஆகஸ்ட் 2005 வரையில் செலவழிக்கப்பட்டுள்ளதாக கணக்காளர் நாயகத்தின் அறிக்கை தெரிவிக்கிறது. மீதிப்பணமான 26.5 மில்லியன் டொலர்கள் இவ்வுள்நாட்டு நிறுவனங்களின் கையிருப்பிலேயே உள்ளது. இரண்டு நிறுவனங்களால் சேகரிக்கப்பட்ட 480,900 டொலர்களில், 363,000 டொலர்கள் நிரந்தர சேமிப்புகளாக வைப்பிலிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. திட்டமிடாத வகையில் பணம் சேகரித்தல், சேமிப்பிலிடல், வரவு செலவுக் கணக்குகளின்றிச் செலவழித்தல் போன்ற நடவடிக்கைகளில் அரசாங்க அமைச்சுகள், திணைக்களங்கள், பொதுக்கூட்டுத்தாபனங்கள் போன்றவையும் ஈடுபட்டுள்ளன.

ஏறத்தாள 384 அரசசார்பற்ற நிறுவனங்கள் 1,321.2 மில்லியன் டொலர்களை மீள்கட்டமைப்புக்கு வழங்குவதாக கூறியிருந்த போதும், சில நிறுவனங்கள் எவ்வித ஒப்பந்தங்களையும் அரசுடன் செய்யவில்லை. அரசுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்ட சில நிறுவனங்கள், திட்டமிட்ட செயற்பாடுகளை இன்னும் ஆரம்பிக்கவில்லை. இந்த நிறுவனங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கணக்காளர் நாயகம் கூறியுள்ளார்.

### சுனாமி நிவாரண ஊழல்

சுனாமி நிவாரணம் வழங்கல், மீள்கட்டமைப்பு ஆகிய நடவடிக்கைகளில் ஊழல் ஒரு முக்கிய பிரச்சனையாக உள்ளது. உதாரணமாக அம்பாறை மாவட்டத்தில் உதவி பெறத் தகுதியில்லாதவர்களுக்கு 13,200 டொலர்கள் (ரூபாய் 14 லட்சம்) நிவாரண நிதியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்படுவது தொடர்பாக சமூகசேவைகள் பணிப்பாளரின் சுற்றறிக்கை (31.12.2003 இலக்கம் 2003/1) பல முறை மீறப்பட்டுள்ளது. சுற்றறிக்கைக்கு மாறாக மூன்று நிலையங்களில் 59,800 டொலர்கள் (ரூபாய் 60 லட்சம்) பெறுமதியான சமைத்த உணவு வழங்கப்பட்டுள்ளது. சமைத்த உணவு வழங்கப்படாமலேயே பணம் பெறப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன. சுனாமியினால் பாதிப்புகள் எதுவும் இல்லாத மன்னார் மாவட்டத்தில் 13,000 டொலர்கள் சமைத்த உணவிற்காகச் செலவழிக்கப்பட்டுள்ளது.

### ஆவணங்கள்

சுனாமியால் ஏற்பட்ட மற்றுமொரு முக்கிய பிரச்சனை ஆவணங்களின் அழிவாகும். மக்கள் முக்கிய ஆவணங்களின்றித் தொடர்ந்தும் அல்லற்படுகின்றனர். பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள், தேசிய அடையாள அட்டைகள், நில உரிமைக்கான உறுதிகள் போன்றவை இவையாகும். சுனாமியால் அழிக்கப்பட்ட ஆவணங்களை மீளப்பெறுவதற்கான நடவடிக்கைகளில் ஐக்கியநாடுகள் அபிவிருத்தி நிறுவனமும் (UNDP) சில அரசசார்பற்ற நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன. அம்பாந்தோட்டை, அம்பாறை மாவட்டங்களில் ஐக்கியநாடுகள் அபிவிருத்தி நிறுவனம் சட்ட ஆவணங்கள் தொடர்பான ஏழு நடமாடும் சேவைகளை மார்ச், ஏப்பிரல் 2005ல் நடாத்தியுள்ளது. சுனாமியால் தேசிய அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு, விவாகப் பத்திரங்கள், சாரதி அனுமதிப் பத்திரங்கள், கடவுச்சீட்டுகள், கல்வி அத்தாட்சிப் பத்திரங்கள் போன்ற ஆவணங்களை இழந்த 26,000 பேருக்குத் தீர்வளிக்குமுகமாக ஆட்பதிவு, பொலிஸ் வாகனப்பதிவு, ஓய்வூதியத் திணைக்களங்கள், நிதியமைச்சு, பரீட்சைத்திணைக்களம் மற்றும் சட்ட உதவிநிறுவனங்கள் ஆகியவற்றின் அனுசரணையுடன் உதவியளித்துள்ளதாக ஐக்கியநாடுகள் அபிவிருத்தி நிறுவனம் அறிவித்துள்ளது. இவ்வாறான நடமாடும் சேவைகளை முலலைத்தீவு மாவட்டத்திலும் நடத்தத் திட்டம் உள்ளது.

### பாதுகாப்பு வலயம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட தென் மாவட்டங்களுக்கு கடற்கரையிலிருந்து 100 மீட்டரும், வடகிழக்கு மாவட்டங்களுக்கு 200 மீட்டரும் கொண்ட கரையோரக் காப்பு வலயங்களை இலங்கை அரசு

பிரகடனப்படுத்தியுள்ளது. இவ்வலயங்களில் மீளக்குடியமர்வு, மீள்கட்டமைப்பு, புதிய அபிவிருத்தி ஆகியவை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளன. இவ்வாறான பாதுகாப்பு வலயம் பற்றிய விளக்கக் குறைபாட்டால் பல பிரச்சனைகள் எழுந்துள்ளன. உதாரணமாக, கடல் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே உள்ளவர்கள் வீடுகளைக் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கும் அதே வேளையில், கடலுக்கு மிக அருகே வாழ்ந்தவர்கள் சொத்துக்கள் முற்றாக அழிக்கப்பட்டநிலையில் அவ்வித அனுமதியின்றி வாழ்க்கையைத் தொடர முடியாத இழுபறி நிலையில் உள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களில் பலர் தாம் தொடர்ந்தும் கடலுக்கு அருகிலேயே தொழில் மற்றும் உணர்ச்சி ரீதியான காரணங்களுக்காக வாழ விரும்புவதாக இலங்கை சென்ற ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதியான பில் கிளின்டன் (Bill Clinton) தெரிவித்துள்ளார். நூறு மீட்டர் கரையோரப் பாதுகாப்பு வலயத்துக்குள்ளான தனியாருக்குச் சொந்தமான நிலங்கள் அவரவருக்கே தொடர்ந்தும் சொந்தமாக இருந்தும், ஆயிரக்கணக்கானோர் தமது சொந்த நிலங்களுக்குத் திரும்பச் செல்லமுடியாத நிலையிலுள்ளனர். இதே வேளை, இவ்வாறான பாதுகாப்பு வலயச் சட்டத்திலிருந்து சில தனியார்கள், சொத்து அபிவிருத்தி செய்பவர்கள், உல்லாசப் பிரயாண விடுதிகள் என்பன விதிவிலக்களிக்கப்பட்டிருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. இவ்வாறானவர்கள் கரையோரப் பாதுகாப்பு வலயத்திற்குள்ளே கட்டடங்களை நிர்மாணிக்கத் தொடங்கியுள்ளனர். இக்கரையோரப் பாதுகாப்புச்சட்டம் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக அமுல்படுத்தப்படவில்லையென பல முறைப்பாடுகள் சமூக அபிவிருத்தி நடுவத்துக்குக் (CCD) கிடைத்துள்ளன. சில கிராமங்களில் இச்சட்டம் சரியாக அமுல்படுத்தப்படும் அதே வேளை, அயல் கிராமங்களில் கட்டட வேலைகள் பாதுகாப்பு வலயத்துக்குள் அனுமதிக்கப்படுகின்றன. இதனால் கிராமங்களுக்கிடையே முரண்பாடுகள் தொடங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

கரையோரப் பாதுகாப்பு வலயப் பிரச்சனைகளை ஆராய்வு செய்த ஜனாதிபதிக் குழு இச்சட்டங்களை மீளாய்வு செய்வதற்கு 14 ஒக்டோபர் 2005 அன்று தீர்மானித்தது. இதன் பிரகாரம் கரையோரப் பாதுகாப்பு வலயம் தென் மாவட்டங்களில் 55-25 மீட்டராகவும் வடகிழக்கு மாவட்டங்களில் 100-50 மீட்டராகவும் குறைக்கப்பட்டுள்ளது.

### உளவள-சமூக பராமரிப்பு

சுனாமியால் ஏற்பட்ட மிக முக்கிய பாதிப்பு மக்களின் உளரீதியான தாக்கமாகும். சுனாமியிலிருந்து தப்பியவர்களுக்கு உளவியல் ரீதியான சிகிச்சையளிக்கப் போதியளவு மனநல வைத்தியர்கள் இல்லாத காரணத்தால் நிவாரண நிறுவனங்கள் திண்டாடுகின்றன. சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களில் 5-10 வீதமானவர்களுக்கு நீண்ட கால உளவள சிகிச்சை தேவைப்படும் என இனம் காணப்பட்டுள்ளது. கடலைக் குற்றம் சாட்ட விருப்பமற்ற மக்கள், உறவினர்களைக் காப்பாற்ற முடியாத குற்ற உணர்வாலும் துக்கத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளாதாக டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கம் கருத்துத் தெரிவித்துள்ளது. கடலின் தன்மை பற்றிய விஞ்ஞான விளக்கம் அளிக்கப்படுவது இவ்வாறான மனப்பாதிப்பிலிருந்து மீளுவதற்கு உதவியதாக பெல்ஜியன் செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது. சுனாமி ஒரு மிக அரிய நிகழ்வெனவும், கடற்கரையில் விளையாடுவதற்கு எந்த விதப் பயமும் இல்லையென சில இலங்கையைச் சார்ந்த நிறுவனங்கள் ஊடகங்கள் மூலம் விளம்பரப்படுத்தியதனால், சிறுவர்கள் மனநிலையை ஓரளவிற்குத் தேற்ற முடிந்துள்ளது. ஊடகங்கள் மூலம் தமது கதைகளைக் கூறுவதற்கும் இந்த நிறுவனங்கள் உதவியுள்ளன.

## அனர்த்தம் பற்றிய தரவுகள் (Data)

அனர்த்தங்களினால் ஏற்படும் தாக்கங்களை அடையாளம் காண்பதற்கும், அபிவிருத்திக்கும் அழிவுகளுக்குமிடையே உள்ள தொடர்பினைக் கண்காணிப்பதற்கும், அனர்த்தம் பற்றிய தரவுகள் இன்றியமையாததாகும். அனர்த்தங்களினால் ஏற்படும் மனித, பொருளியல் இழப்புகளை, பிறஸல்சில் (Brussels, Belgium) இயங்கும் அனர்த்தங்கள் பற்றிய ஆய்வு மையம் (Centre for Research on the Epidemiology of Disasters) முகாமைத்துவப்படுத்தும் அவசரகால அனர்த்த தரவுத்தளத்தின் (Emergency Disasters Database) மூலம் மதிப்பீடு செய்யலாம். தேசிய மட்டத்தில், தராதரப்படுத்தப்பட்டதாகவும், முறைமையாகவும் தரவுகள் சேகரிக்கப்படாததால், இவ்வாறான அனர்த்த தரவுத்தளங்களை, கொள்கைத் திட்டமிடல் நடவடிக்கைகளுக்கு உபயோகிக்க முடியாது உள்ளது. அரசாங்கங்களுக்கும் மற்றும் நிறுவனங்களுக்கும் அனர்த்தம் சம்பந்தப்பட்ட தரவுகள் சேகரிப்பது பற்றி பின்வரும் அறிவுறுத்தல்களை செஞ்சிலுவை செம்பிறை சம்மேளனம் (IFRC) தந்துள்ளது:

1. அனர்த்தத் தாக்கங்கள் பற்றிய தரவு சேகரிப்பதற்கான உள்நாட்டு, தேசிய மட்ட மனிதவளங்களை உருவாக்குதல்.
2. பின்வரும் நோக்குடன் அனர்த்தத் தரவு சேகரிப்புக்கான முறைகளைத் தராதரப்படுத்துதல்:
   - மொத்த பொருளாதார இழப்புகளை அளவிடுதல்.
   - சூழலியல் சம்பந்தப்பட்ட இழப்புகளையும் அதனுடன் இணைத்தல்.
3. சிக்கலான அவசரகால அனர்த்தங்களுக்கும், வறட்சிகளுக்குமான வரைவிலக்கணங்களைத் தராதரப்படுத்துதல்.
4. உள்நாட்டுத் தரவு சேகரிப்போர், இடைநிலை இணைப்பாளர்கள் சர்வதேச மட்ட தரவுத்தள முகாமையாளர் ஆகியோர் இடையிலான தகவல் பரிமாறலைச் சீராக்கல்.
5. தரவுகளைப் பகிர்ந்து கொள்வதற்கும், சரிபார்ப்பதற்கும், சர்வதேச மட்டத்திலான தரவுத்தள முகாமையாளர்களிடையே கூட்டுமுயற்சியை ஆதரித்தல்.
6. அடிப்படையானதும் சுருக்கமானதுமான அனர்த்தத் தாக்கத் தரவுகள் பொதுமக்கள் பெறக்கூடிய வகையில் வசதிகளைச் செய்தல்.

## சுனாமி எச்சரிக்கை முறை

சுனாமி எச்சரிக்கை முறைக்கான திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு இந்திய அரசாங்கம் ஒக்டோபர் 2005இல் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இத்திட்டம் செப்டம்பர் 2007இல் நடைமுறைக்கு வரும். ஐதராபாதில் இயங்கவிருக்கும் இத்திட்டத்தின் செலவு 28 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் (ரூபாய் 285.8 கோடி). இந்தியா உட்பட 20 நாடுகள் கொண்ட தொடர்பு வலைப் பின்னலில் ஏழு இந்து சமுத்திர சுனாமி எச்சரிக்கை நிலையங்கள் இயங்கும். ஜப்பான், சிலி போன்ற நாடுகளில் உள்ளவாறு ஐந்து நிமிடங்களில் தகவல் அறிவிக்கக்கூடியதாக இத்திட்டம் இருக்குமென இந்தியத் தகவல் அமைச்சர் ஜெய்பால் ரெட்டி தெரிவித்துள்ளார். சுனாமி பற்றிய அறிவித்தல்களுக்கு இந்து சமுத்திர நாடுகள் தற்போது ஜப்பானிய காலநிலை அவதான நிலையத்திலும், பசிபிக் அமெரிக்க சுனாமி எச்சரிக்கை நிலையத்திலும் தங்கியுள்ளன.

அவுஸ்திரேலிய பெர்த் (Perth) நகரில் இந்து சமுத்திர சுனாமி எச்சரிக்கைக்கான அரசாங்கங்களுக்கிடையிலான இணைப்புக்குழு (Intergovernmental Coordination Group for Indian Ocean Tsunami Warning and Mitigation System – ICG/IOTWS) 2005 ஆகஸ்ட் மாதத்தில் கூடியது. ஜுன் மாதத்தில் ஐக்கிய நாடுகளால் இத்திட்டத்திற்கான இணைப்புக்குழு அமைக்கப்பட்டது. ஒருங்கிணைக்கப்பட்ட பிராந்திய எச்சரிக்கை முறையொன்றை அமைப்பதன் ஆரம்ப கட்டமாக, இந்து சமுத்திர நாடுகளின் தொழில்நுட்பத் திட்டங்களைப்பற்றி விளங்கிக் கொள்ளுதல் இக்கூட்டத்தின் நோக்கமாகும். தொழிநுட்ப ரீதியான பொருந்தும் தன்மை, பல இடங்களில் ஒரே தரவுகளைப் பெறுதல், தொடர்புசாதனம், எச்சரிக்கை மையங்கள், கடல் மட்டத் தொடர்புகள் போன்ற பல விடயங்கள் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டன.

## உதவி வழங்கலில் உள்ள பிரச்சனைகள்

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் தினசரி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான கொடுப்பனவான ரூ.5000 தொடர்பாகப் பல பிரச்சனைகள் அவதானிக்கப்பட்டுள்ளதாக இலங்கையின் கணக்காளர் நாயகம் தெரிவித்துள்ளார். அரச சுற்றறிக்கைகளின் தெளிவற்ற தன்மையால் மேற்கூறிய கொடுப்பனவுகள் வெவ்வேறு இடங்களில் பல்வேறு அடிப்படைகளில் கொடுக்கப்பட்டதனால் அரசாங்கத்துக்கு மேலதிகச் செலவுகள் ஏற்பட்டதாக இவர் குறிப்பிடுகின்றார். தெளிவான கொள்கைகள் இல்லாத காரணத்தால் குறுகிய காலத்துக்குள் சுற்றிக்கை விபரங்கள் மாற்றப்பட்டன. இவ்வாறு வெளிவந்த சுற்றறிக்கைகள் பின்வருமாறு:

| சுற்றிக்கை | திகதி | வெளியிடும் அதிகாரி |
|---|---|---|
| MF/ST | 17.1.2005 | நிதிச் செயலாளர் |
| MF/ST | 28.1.2005 | திறைசேரி செயலாளர் |
| MF/ST | 31.1.2003 | திறைசேரி செயலாளர் |
| NBD/SS-4 | 2.2.2005 | தேசிய நிதிஒதுக்கீட்டு பணிப்பாளர் நாயகம் |
| MF/ST | 9.5.2005 | திறைசேரி செயலாளர் |

## சுகாதாரம்

சுனாமி அனர்த்தத்தின் பின், பாதிக்கப்பட்ட மக்கள் நலன்புரி நிலையங்களில் இருந்தபோது போதிய சுகாதார வசதிகளைப் பெற்றதாக கொழும்பைச் சார்ந்த மனித உரிமைகள் நிறுவனமான INFORM தெரிவித்துள்ளது. இங்கு பல நிறுவனங்கள் நடமாடும் வைத்திய சேவைகளைச் செய்தன. இவ்வாறான நலன்புரி நிலையங்கள் நகர்ப்பகுதிகளில் இயங்கியதால் அரசாங்க, தனியார் சுகாதார வசதிகளையும் உபயோகிக்கக்கூடியதாக இருந்தது. ஆனால் நலன்புரி நிலையங்களை விட்டு வெளியேறிய பிறகு மக்கள் வாழும் இடைக்காலத் தங்குமிடங்களில் சுகாதார வசதிகள் முற்றாக இல்லையெனக் கூறலாம். இங்கு ஒழுங்கான நடமாடும் வைத்திய முகாம்கள் நடைபெறாத அதே வேளை, பொது வைத்தியசாலைகளுக்குச் சென்றடைவதற்கான போக்குவரத்து வசதிகளும் மிகக் குறைவாகவே உள்ளன. இவ்வாறான சூழ்நிலையால் மிகமோசமாகப் பாதிக்கப்படுவர்கள் இனப்பெருக்க, பாலியல் சம்பந்தப்பட்ட சுகாதாரத் தேவைகளையுடைய பெண்களாகும்.

திருகோணமலை மாவட்டத்தில் டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் பரவுவதற்கான அபாயம் உள்ளது. இதனால் டெங்கு, மலேரியா நோய்களைப் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தொலைக்காட்சி உட்பட பல ஊடகங்களின் மூலம் அப்பிரதேச சுகாதார அதிகாரி ஆரம்பித்துள்ளார். டிசெம்பர் 2005இல் இந்நிகழ்ச்சி தொடர்ந்து ஏழு நாட்களுக்கும், பின் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒளிபரப்பப்படும். நீர் தேங்கி நிற்கும் இடங்களான சிரட்டைகள், போத்தல்கள், பொலிதீன் பைகள், பிளாஸ்டிக் பாத்திரங்கள் போன்றவற்றில் நுளம்பு பெருகும் இடங்களை அழித்தல் பற்றி இந்நிகழ்ச்சி எடுத்துக் கூறும். மரங்கள் நடுவதற்கு பயன்படும் வெற்று தார் பீப்பாக்கள், பழைய டயர்கள் போன்ற இடங்களிலும் நீர் தேங்குவதை சமூக வளர்ச்சி நடுவம் அவதானித்துள்ளது. டெங்கு மலேரியா தடுப்பதற்கான திட்டமொன்று மட்டக்களப்பு மாவட்ட சமூக சுகாதார விழிப்பு அதிகாரியினால் உருவாக்கப்பட்டுள்ளது. சமூக வளர்ச்சி நடுவமும் நோய்த் தடுப்பின் அவசியத்தை உணர்ந்ததால் பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகளைத் தயாரித்துள்ளது.

## இருப்பிடம்

செயற்திட்டங்களை அமுல் செய்வதற்காகக் கைச்சாத்திட்டு, அவற்றை முடிக்கத் தவறிய அரசசார்பற்ற நிறுனங்களுக்கெதிராக அரசாங்கம் ஒரு பிரச்சாரத்தை முடுக்கி விட்டுள்ளது. இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், கெயர் சர்வதேச அமைப்பு (Care International), உலகதரிசனம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், கறிடாஸ் போன்ற நிறுனங்களை அரசாங்கம் ஆகஸ்ட் 2005இல் இதன் தொடர்பில் பெயரிட்டுள்ளது. வீடுகளைக் கட்டுவதற்கான நிலங்கள் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்டள்ளதாக அரசாங்கம் கூறியுள்ளது. எனினும் பின்வரும் பிரச்சனைகளை INFORM சுட்டிக்காட்டியுள்ளது:

1. சில நிலங்கள், காணிச் சீர்திருத்த ஆணைக்குழு, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் போன்றவற்றுக்குச் சொந்தமானதாகும். இந்நிலங்களை சுனாமி மீள்கட்டமைப்பு செயற்திட்டங்களுக்குக் கொடுக்கும்படி ஜனாதிபதி கட்டளையிட்டும், அது தொடர்பாக அரசநிறுவனச் செயல்முறைகளில் பெரும் தாமதங்கள் ஏற்படுகின்றன. இவ்வாறு இனம் காணப்பட்ட சில நிலங்கள், ஏற்கனவே வேறு பொது செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டவை. மற்றும் சில நிலங்கள் தனியாருக்கு சொந்தமானவை. அரசாங்கம் இக்காணிகளுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை இவர்களுக்குக் கொடுக்காததால், இந்நிலங்களை உபயோகிக்க முடியாத நிலையுள்ளது. நிலங்களுக்கான உரிமை நிலைநாட்டப்படும் வரை நிறுனங்கள் கட்டட வேலைகளை ஆரம்பிக்க முடியாதுள்ளன.

2. அடையாளம் காணப்பட்ட சில காணிகள் நிரந்தரக் குடியேற்றங்களுக்கு உகந்தவையல்ல. கட்டட வேலைகளுக்கோ பயிர்ச்செய்கைக்கோ பொருத்தமில்லாத பாறை நிலங்களே இவை. அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்றில் சதுப்பு நிலங்கள் போன்ற ஈரநிலங்களும் சுனாமி செயற்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலங்களை நிரப்புவதன் விளைவுகள் பற்றி சில நிறுவனங்கள் கவலை தெரிவித்துள்ளன. ஈரநிலங்கள் சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்தவை. இவற்றை நிரப்புவதால், இயற்கை வடிகால் பிரதேசங்கள் இல்லாமல் போகும் நிலையுண்டாகி, வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்படும்.

3. கட்டடங்களை ஆரம்பிப்பதற்காகப் பல அரச நிறுனங்களிடம் அனுமதி பெறவேண்டியுள்ளதாலும் நீண்ட தாமதங்கள் ஏற்படுகின்றன. ஒரு செயற்திட்டத்திற்கான அனுமதியைப் பெறுவதற்கு,

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, நில அளவைத் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகாரசபை, கரையோரப் பாதுகாப்பு அதிகாரசபை, உள்நாட்டு அரச அதிகார சபைகள், மின்சார சபை, TAFREN, சுனாமி வீடு மீள்கட்டமைப்பு அலகு (Tsunami Housing Reconstruction Unit) போன்ற பல நிறுனங்களின் அனுமதி தேவை. இவ்வாறு வீடுகளைக் கட்டுவதற்கு உடன்படிக்கைகளைச் செய்த அனைத்துலக, தேசிய நிறுவனங்கள் இவ்வாறான அனுதிகளை விரைவாகப் பெறுவதற்கான ஒரு திட்டத்தை அரசாங்கத்திடம் கோரியுள்ளன. ஆனால், இது வரை இதற்கான ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

4. செயற்திட்டங்களை உருவாக்கும் போது, சம்பந்தப்பட்ட மக்களின் ஆலோசனைகளையும் நிறுவனங்கள் பெறுகின்றன. இதுவும் தாமதங்கள் ஏற்படுவதற்குக் காரணமாகும். இவ்வாறு மக்களின் ஆலோசனைகளைப் பெறும் முறைகளில், அரசாங்கமோ அரச சார்பற்ற நிறுவனங்களோ பரிச்சயமானவை அல்ல. வீடமைப்புத் திட்டங்கள் செயற்படுத்தப்படும் இடங்கள் பற்றி பல சாராருடனும் கலந்தாலோசித்து தீர்வுகளெடுப்பதிலும் கால தாமதம் ஏற்படுகிறது. நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படுவோர் பற்றிய விபரங்கள் இன்னமும் முடிவு செய்யப்படவில்லை. வீடுகள் கட்டப்படும் இடங்கள் பற்றிய மனுக்களுக்கு முடிவுகளெடுக்கப்பட்டால்தான் இவ்வாறான விபரங்களை முடிவு செய்யலாம். கட்டிக் கொடுக்கப்படும் வீடுகளின் அமைப்பிலும் பல சிக்கல்கள் உள்ளன. நகர அபிவிருத்தி அதிகாரசபையால் நிர்மாணித்துக் கொடுக்கப்படும் வீடுகளின் அமைப்பு எதிர்கால அதிகரிப்புகளுக்கு இடம்கொடுக்கும் வகையில் இல்லை. வீடுகளின் அமைப்பு பற்றியும், வீடுகளுக்கிடையேயான தூரங்கள் பற்றியும், குறிப்பிட்ட சமூகத்துடனும் கட்டட நிபுணர்களுடனும் கலந்தாலோசனை மூலமே முடிவுகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

5. வெவ்வேறு நிறுவனங்கள் கட்டும் வீடமைப்புகளிடையே உள்ள வெளிப்படையான வித்தியாசங்கள், மீளமர்த்தப்பட்ட சமூகங்களிடையே முரண்பாடுகளைத் தோற்றுவிக்கிறன. அரச நிறுவனங்களால் எதிர்பார்க்கப்படும் தராதரங்கள் சீராக இல்லை. இனப்பிரச்சனையினால் இடம்பெயர்ந்து, இன்னும் மீள்குடியேற்றத்துக்காகக் காத்திருக்கும் மக்கள், சுனாமி மீள்திட்டங்களில் சேர்க்கப்படவில்லை. இதனால் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கும் இனப்பிரச்சனையினால் பாதிக்கப்பட்டோருக்கும் இடையே பிணக்குகள் ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

6. ஈரநிலங்களை நிரப்புதல், நில அளவைகளை மேற்கொள்ளுதல் போன்ற எதிர்பார்க்காத செலவுகள் ஏற்பட்டதாலும், நிறுவனங்களின் நிதி நிலைமையில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதைத் தவிர, கட்டடப் பொருட்களின் விலையதிகரிப்பு, மண் போன்றவற்றுக்குத் தட்டுப்பாடு, கூலியாட்களுக்கான தட்டுப்பாடு போன்ற காரணங்களும் மதிப்பிடப்பட்ட செலவுகளை அதிகரித்துள்ளன. உதாரணமாக, காலி மாவட்டத்தில் சுனாமிக்கு முன் நாட்கூலி ரூ 350 ஆகும்; ஆனால் தற்போது இது ரூ 500ஆக அதிகரித்துள்ளது.

7. பல மாடிக் கட்டடங்களை கடலருகே கட்டுவதற்கு அரசாங்க அதிகாரிகள் விரும்புகின்றனர். எனினும் நிதி வழங்கும் நிறுவனங்கள் இதற்கு உடன்படவில்லை. இதனால் செயற்திட்டங்கள் கால தாமதம் அடைகின்றன. மாவட்டங்களுக்கு இடையேயும் வித்தியாசங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக, காலி மாவட்டத்தில் கோரப்பட்ட வீடுகளில் அரைவாசியே அனுமதிக்கப்பட்டுள்ளது; ஆனால் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் முழு வீடுகளுக்கும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

8. மீள்குடியமர்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடங்களில் மரங்களோ, வீதிகள், சுகாதாரம் போன்ற வசதிகளோ இல்லை. இதனால் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதற்கான போக்குவரத்தும் இடைஞ்சலாக இருக்கும். இவ்வாறான பிரச்சனைகளால் மக்கள் குடியேறத் தயங்குகின்றனர். எனினும், அடிப்படைத் தேவைகளுக்கான திட்டங்களோ மக்களுக்கு நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகளோ இது வரை எடுக்கப்படவில்லை.

## சிறுவர்கள்

சுனாமியின் பாதிப்பால் 3,739 சிறுவர்கள் ஒரு பெற்றாரையும், 1,080 பேர் இரண்டு பெற்றோரையும் இழந்துள்ளதாக இலங்கை சிறுவர்நல சேவைகள் கூறியுள்ளது. இரண்டு பெற்றோரையும் இழந்தவர்களில் 740 பேர் வடகிழக்கைச் சேர்ந்தவர்கள். வடகிழக்கில் சுனாமியின் பின் பல

அனாதை இல்லங்கள் நிறுவப்பட்டன. இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டோருக்கு, சிறுவா்களைப் பற்றிய சட்டங்கைளப் பற்றியோ அவா்களின் உளவியல் தேவைகளைப் பற்றியோ அறிவோ அனுபவமோ இருக்கவில்லை. இதனால் அனாதை இல்லங்களில் சிறுவா்கள் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டதாகத் தமிழ் தகவல் நடுவத்துக்குத் தெரிய வந்துள்ளது. இது தொடா்பாக ஏற்கனவே இந்நடுவம் அனைத்துலக, தேசிய நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளது. சிறுவா்கள் எவ்விதமான துன்புறுத்தலும் இன்றி பாதுகாப்பான இடங்களில் இருப்பதை உறுதிப்படுத்த இவ்வாறான நிறுவனங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு தமிழ் தகவல் நடுவம் கோரியுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட 200,000 சிறுவா்கள் மீண்டும் பாடசாலைகளுக்கு செல்வதை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளில் UNICEF ஈடுபட்டுள்ளது. இதற்கான உதவிகளைக் கல்வி அமைச்சுக்கு இந்நிறுவனம் வழங்கியுள்ளது. நேரடியாக சுனாமியால் பாதிக்கப்பட்ட 102 பாடசாலைகளைச் சுத்தம் செய்தல், தளபாடங்கள், சீருடைகள் வழங்குதல் போன்ற திட்டங்களை இந்நிறுவனம் செய்துள்ளது. பல சிறுவா்கள் இன்னமும் பாடசாலைக்குத் திரும்பிச் செல்லவில்லை. வருமானம் பெறும் வழிகளை இழந்தோா் தமது பிள்ளைகளை வேலைகளுக்கு அனுப்புகின்றனா் என UNICEF நம்புகிறது. பாதிக்கப்பட்ட கட்டடங்களுக்குத் தமது பிள்ளைகளை அனுப்புவதற்குச் சில பெற்றோா் தயங்குவதாகவும் தெரிய வருகிறது. தற்காலிகப் பாடசாலைகள், பாடப் புத்தகங்களை அச்சுப்பதித்தல், பாதிக்கப்பட்ட பாடசாலைகளைத் திருத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்கு மேலும் உதவுவதாக UNICEF உறுதியளித்துள்ளது.

## இணைப்பு

**சுனாமி மீள்கட்டமைப்புக்கு அனைத்துலக உதவி**
**மாவட்ட ரீதியான திட்ட நிதிப் பங்கீடு**

| மாவட்டம் | உதவித் தொகை | செலவழிக்கப்பட்ட தொகை |
|---|---|---|
| **சகல மாவட்டங்களும்** | 780,450,828 | 283,879,191 |
| **வடகிழக்கு மாவட்டங்கள்** | | |
| அம்பாறை | 115,261,285 | 60,436,118 |
| மட்டக்களப்பு | 117,874,541 | 44,003,317 |
| திருகோணமலை | 181,770,700 | 46,234,550 |
| யாழ்ப்பாணம் | 38,915,295 | 18,182,020 |
| கிளிநொச்சி | 22,059,275 | 7,733,486 |
| முல்லைத்தீவு | 32,246,598 | 14,601,729 |
| **மொத்தம்** | 508,127,694 | 191,191,220 |
| **தென் மாவட்டங்கள்** | | |
| கொழும்பு | 15,961,223 | 7,975,584 |
| காலி | 80,726,965 | 22,697,143 |
| கம்பஹா | 7,879,024 | 1,627,330 |
| அம்பாந்தோட்டை | 68,702,025 | 30,802,333 |
| களுத்துறை | 24,993,656 | 6,564,022 |
| மாத்தறை | 72,730,217 | 22,750,272 |
| புத்தளம் | 1,330,024 | 271,287 |
| **மொத்தம்** | 272,323,134 | 92,687,971 |
| இன்னும் ஒதுக்கப்பட வேண்டிய தொகை | 218,101,331 | 81,445,918 |
| **கூட்டுமொத்தம்** | 998,552,159 | 365,325,109 |

*மூலம்: தேச மீளெழுப்புக்கான ஆற்றல்குழு (TAFREN)*